# <u>தில்லி அரசின் இலவச தண்ணீர் திட்டம்</u>

**அருண் ஜேட்லி**
(மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர்)

மானியங்கள் என்பது வரையறை இல்லாத அளவுக்கு வகைப்படுத்தப்படாத பிரிவு மக்களுக்கு வழங்கப்படும் தொகை. மானியங்கள் மூலமாக அரசு பொருளின் விலையை அல்லது மதிப்பைக் கட்டுப்படுத்துவதில்லை. தற்போதுள்ள பொருள்களின் விலையையும் மதிப்பையும் மாற்றுவதில்லை. ஒரு பிரிவினருக்கு மானியம் வழங்குவதற்காக வரி செலுத்துவோரின் பணத்தைதான் பயன்படுத்துகிறது. மானிய உதவி அதிகரிக்க அதிகரிக்க வரிகளையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. மானிய உதவி மூலம் குறுகிய கால ஆதாயத்தைதான் அரசு நாடுகிறது. இதனால் இனி வரும் நாட்களில் இது கடன் சுமையாக மாறிவிடுகிறது. மிகவும் பலவீனமான பிரிவுகளில் மானிய உதவி எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். மீட்டர் பொருத்தப்பட்டுள்ள வீட்டு குடிநீர்க்குழாய் இணைப்பு மூலம் 20 கி.லோ. லிட்டருக்குக் குறைவாகப் பயன்படுத்தும் மக்களுக்கு மானிய உதவியுடன் தண்ணீர் வழங்கும் திட்டத்தை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம். மானிய உதவி விநியோக அமைப்புகளின் செயல்பாட்டை பலவீனப்படுத்துகிறது. தண்ணீர் விநியோக முறையில் இடம் பெறாதவர்களுக்கும் இந்தத் திட்டத்தை செயல்படுத்துவது உண்மையான சவாலாக உள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் குடிநீர் விநியோக குழாய்கள் பதித்து, ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு கொடுப்பதும் ஒரு சிறந்த வாரியத்தால் மட்டுமே முடியும், நிதி அடிப்படையில் பலவீனமாக உள்ள தில்லி குடிநீர் வாரியத்தால் இதனை நிறைவேற்ற முடியாது. தில்லியின் மிகவும் பின்தங்கியுள்ள பிரிவினரை குடிநீர் வாரியம் முற்றிலுமாகப் புறக்கணித்துள்ளது. தில்லியின் பரம ஏழைகள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. குழாய்கள் பதிக்கப்படாத இடங்கள் குடிநீர் இணைப்பு இல்லாத வீடுகள், குடிநீர் மீட்டர் பொருத்தப்படாத வீடுகள், பழுதான மீட்டர்கள் கொண்ட வீடுகள் மானியம் பெற தகுதி இல்லாதவர்கள். புதுதில்லி முனிசிபல் கவுன்சில் ஏரியாவில் உள்ள வீடுகள், குறிப்பாக மிகவும் குறைவான வருமானம் ஈட்டும் தொழிலாளர்கள், தில்லி கன்டோன்மன்ட் பகுதியில் உள்ள வீடுகள் இந்தத் திட்டத்தால் பயன்பெற மாட்டார்கள். இந்தத் திட்டம் மிகவும் பின்தங்கியுள்ளவர்களைப் புறக்கணித்து, மீட்டர் பொருத்தி, தண்ணீர் பயன்படுத்தும் வெகு குறைவான மக்களையே சென்றடையும்.

தில்லியில் இப்போது 18லட்சம் குடிநீர் இணைப்புகள் உள்ளன. இதில், 8.5 லட்சம் இணைப்புகள் மட்டுமே நல்ல நிலையில் இருக்கும் மீட்டர்கள் உள்ளன. 5 லட்சம் மீட்டர்கள் இயங்காத அல்லது பழுதடைந்த நிலையில் உள்ளன. மற்ற அனைத்தும் மீட்டர் பொருத்தப்படாதவை.  தில்லியில் மிக அதிக எண்ணிக்கையிலான குடியிருப்புகள் குடிநீர் இணைப்பு இல்லாதவை என்பதால், இந்த இலவச தண்ணீர் திட்டத்தால் பலனடைய மாட்டார்கள். இவர்கள் அனைவரும் டேங்கர்களையே நம்பியுள்ளனர் . மிகப் பெரிய எண்ணிக்கையிலான அங்கீகாரமற்ற காலணிகளில் குழாய்கள் பதிக்கப்படவில்லை என்பதோடு குடிநீர் குழாய் இணைப்புகள் பதிக்கப்படும் திட்டத்தின் கீழும் வரவில்லை. தனிப்பட்ட வீட்டு இணைப்புகள் இல்லை என்பதால் இலவச தண்ணீர் திட்டத்தில் இவர்களும் வரவில்லை. கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மொத்த இணைப்பு பெற்றுள்ளன, தனிப்பட்ட அடுக்குமாடி வீடுகளில் மீட்டரகள் இல்லை. இவையும் இலவச தண்ணீர் பெறாது. தில்லியில் வாழும் மீட்டர் பொருத்தப்பட்ட 20 கிலோ லிட்டர்கள் அதாவது நாள் ஒன்றுக்கு  666 லிட்டர்கள் தண்ணீர் பயன்படுத்தும் நடுத்தர வர்க்கத்தினர் மட்டுமே இந்த இலவச தண்ணீர் விநியோக திட்டத்தில் பலன்பெறுவார்கள். 20 கிலோ லிட்டர்களுக்கும் அதிகமாக தண்ணீர் பயன்படுத்துபவர்களிடமிருந்து ஒட்டுமொத்த தண்ணீர் பயன்பாட்டுக்கும் சேர்த்து 10% அதிகமாக கட்டணம் வசூலிக்கப்படும். இந்த வகையில் தில்லி நான்கு பிரிவாகப் பிரிக்கப்படுகிறது. முதல் வகையினர் குழாய்களோ குழாய் இணைப்புகளோ பதிக்கப்படாதவர்கள், இவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் வராதவர்கள். பழுதடைந்த அல்ல மீட்டர்கள் பொருத்தப்படாதவர்களும் இந்தத் திட்டத்தின் கீழ் பலனடைய மாட்டார்கள், அவர்கள் தண்ணீருக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். மாதம் ஒன்றுக்கு 20 கிலே லிட்டர்களுக்கும் குறைவாகப் பயன்படுத்தும், மீட்டர் பொருத்தப்பட்டவர்கள் மட்டுமே இதில் பலனடைவார்கள். 20 கிலோ லிட்டர்களுக்கும் அதிகமாகப் பயன்படுத்தும் மீட்டர் பொருத்தப்பட்டவர்கள் 10% அதிகமான கட்டணம் செலுத்துவார்கள். இந்த நான்கு வகையினரில் இந்தத் திட்டத்தால் பலனடைபவர்கள் ஒரு சில வீடுகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமே. இந்தப் பிரிவினர்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பினர்கள் அல்லர்.

************